தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723
Vol. 2 Issue: 01 August 2025

திணைவழியே தலைவியின் உணர்ச்சி பதிவுகள்

Emotional Records of the Heroine Through Thinaisal

சே.நிர்மலா,

முழு நரே முனைவைர் பட்ட ஆய்வாளர், Reg.No.**PH-8667013569**

S. Nirmala,
Full-time PhD Research Scholar, **PH-8667013569**,

Email: nirmala.s2022@vitstudent.ac.in ORCID: https://orcid.org/0009-0009-0453-9672

Abstract: This article primarily investigates how the heroine's emotions are revealed through the Thinai (landscape-based poetic genre) in Sangam literature. In the Sangam period, emotion was considered an integral part of human life, intertwined with nature, as a component of one's mental state. The heroine's physical and psychological emotions, such as the hero's separation, secret love (kallavolukkam), love-sickness (pasalai noi), pangs of love, mental depression, and helplessness, are expressed through color symbolism, statements conveyed via her female companion (Thozhi), and external scenes. Specifically, in Akam (love) poems like Kuruntokai and Narrinai, the heroine's inner feelings gain intricate literary form. Two major emotional states—separation and union—are created through imagery, evidenced by instances such as the onset of pasalai (paleness due to love-sickness), shedding tears, and becoming pale and despondent. These emotions are expressed simply yet intensely through the companion's narrations, humor, symbolism, external imagery, traditional phrases, and Thinai-specific descriptions. By meticulously examining the heroine's emotions from a sociological and psychological perspective, this study illuminates the expression of feminism in Sangam literature and the contemplation of women's status in society. Thus, Sangam literary poems that express the heroine's emotions through Thinai serve as multifaceted documents of emotional identity. In Sangam literature, emotions such as the heroine's sleeplessness, the agony of separation, mental anxiety, loneliness, psychological helplessness, and sorrow are expressed with great subtlety and emphasis through the Thinai structure. Akam literary works like Kuruntokai, Narrinai, and Akananuru notably record how the heroine's restless sleeplessness due to thoughts of the hero is seen as an expression of mental stress and a psychological problem. Based on Freud and other psychological theories, these states are interpreted as psycho-emotional phenomena such as erotomania (love sickness), hysteria, and lack of fulfillment/union. The heroine's sleeplessness, her expressions of sorrow to her companion, and the reflection of her mental distress in natural phenomena describe the psychological nature of a woman. These emotions, intertwined with social, psychological, and cultural contexts, convey the heroine's compassion, frustration, the pain of separation, and the depth of her love. Therefore, the objective of this paper, "Emotional Records of the Heroine Through Thinaisal," is to re-examine and highlight how the background of the heroine's sleeplessness profoundly reflects a person's psychological distress in Sangam literature.

Keywords: Thinai, Sangam literature, Emotion, Heroine, Hero, Character (Paanbu), Secret love (Kallavu), Marital chastity (Karpu), Pasalai noi (Love-sickness), Color symbolism.

ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியங்களில், தலைவியின் உணர்வுகள் எவ்வாறு திணை வழியாக வெளிப்படுகின்றன என்பது இக்கட்டுரையின் முக்கிய ஆய்வுப்பார்வையாக உள்ளது. உணர்ச்சி என்பது மனநிலையின் ஒரு கூறாக இயற்கையோடு பிணைந்த மானுட வாழ்வின் அங்கமாக சங்க காலத்தில் கருதப்பட்டது. தலைவன் பிரிந்த நிலையிலும், களவொழுக்கம், பசலை நோய், காம வேதனை, மனச்சோர்வு, ஆற்றாமை போன்ற தலைவியின் உடல் மற்றும் உள உணர்வுகள் நிறக் குறியீடுகள், தோழி வழிக் கூற்றுகள், புறநிலைக் காட்சிகள் ஆகியவற்றின் மூலம் வெளிப்படுகின்றன. குறிப்பாக குறுந்தொகை, நற்றிணை போன்ற அகப்பாடல்களில் தலைவியின் உள்ளுணர்வுகள் மிக நுணுக்கமாக இலக்கிய வடிவம் பெறுகின்றன. பிரிவு மற்றும் புணர்ச்சி ஆகிய இரண்டு முக்கிய மனநிலைகள்

பசலை பாய்தல், நீர்வாரல், பசந்து பனிவாகுதல் போன்ற சான்றுகளால் படிமங்கள் மூலம் படைக்கப்படுகின்றன. இந்த உணர்வுகள் தோழி வழிக் கூறல்கள், நகைச்சுவை, குறியீடுகள், புறநிலை வழிப் பிம்பங்கள், மரபுச் சொற்கள், திணைவழிக் கூறல்கள் மூலம் எளிமையாகவும் தீவிரமாகவும் வெளிப்படுகின்றன. தலைவியின் உணர்வுகள் சமூகவியல் மற்றும் உளவியல் பார்வையில் நுணுக்கமாக ஆராயப்படுவதன் மூலம் சங்க இலக்கியங்களில் பெண்ணியத்தின் வெளிப்பாடும், சமூகத்தில் பெண்ணின் நிலை குறித்த சிந்தனையும் விளங்குகிறது. இவ்வாறு திணை வழி தலைவியின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் சங்க இலக்கியப் பாடல்கள், பன்முகத்தன்மை வாய்ந்த ஒரு உணர்ச்சி அடையாள ஆவணங்களாக அமைகின்றன. சங்க இலக்கியங்களில், தலைவியின் உறக்கமின்மை, பிரிவின் வேதனை, மனக்கவலை, தனிமை, உளவியல் ஆற்றாமை, வருத்தம் ஆகிய உணர்ச்சிகள் மிக நுணுக்கமாகவும் அழுத்தமாகவும் திணை அமைப்பின் வாயிலாக வெளிப்படுகின்றன. தலைவனை நினைத்து தலைவி உறக்கமின்றி தவிப்பதும், அந்த நிலை மனஅழுத்தத்தின் வெளிப்பாடாகவும், உளவியல் சிக்கலாகவும் காணப்படுவதையும் குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு போன்ற அக இலக்கியங்கள் சிறப்பாக பதிவு செய்கின்றன. ஃப்ராய்ட் மற்றும் பிற உளவியல் கோட்பாடுகளின் அடிப்படையில், இந்நிலைகள் காமநோய், மனவலிப்பு, புணர்ச்சி பற்றாக்குறை ஆகிய மன உளவியல் நிகழ்வுகளாக விளக்கப்படுகின்றன. தலைவியின் உறக்கமின்மை, தோழியிடம் கூறும் வருத்தக் கூற்று, இயற்கை நிகழ்வுகளின் மேல் அவளுடைய மன உளைச்சல் பிரதிபலிப்பது போன்றவை, ஒரு பெண்ணின் உளவியல் தன்மையை விவரிக்கின்றன. இந்த உணர்வுகள் சமூக, உளவியல், பண்பாட்டு நிலைகளோடு இணைந்து தலைவியின் மனவுருக்கம், விரக்தி, பிரிவின் வலி, அன்பின் ஆழம் ஆகியவற்றை உணர்த்துகின்றன. எனவே, தலைவியின் உறக்கமின்மையின் பின்னணி ஒருமனிதனின் உளவியல் துயரத்தின் வெளிப்பாடாக சங்க இலக்கியங்களில் அழுத்தமாக விளங்குகிறன என்பதை “திணைவழியே தலைவியின் உணர்ச்சி பதிவுகள்” மீட்டுக்காட்ட எடுத்தாய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறல் சொற்கள்

திணை, சங்க இலக்கியம், உணர்ச்சி, தலைவி, தலைவன், பண்பு, களவு, கற்பு, பசலை நோய், நிறக்குறியீடு.

உணர்ச்சி

உணர்ச்சி (Emotion) என்பது மனநல செயல்பாட்டு அனுபவம் ஆகும். இது தீவிர உயர் மட்ட இன்பம் அல்லது அதிருப்தி ஆகியவற்றால் தனித்தன்மையளித்து வகைப்படுத்தப்படும் செயலாகும். விஞ்ஞான பரிமாறல்கள் மற்றும் அலசல்கள் ஒரு வரையறையை எட்டாமல், வேறு அர்த்தகளுக்கு இழுத்துச் செல்வதை அறிய உணர்ச்சி என்னும் கூறு பெரும்பாலும் மனநிலை குணாம்சம், ஆளுமை ஒழுங்கமைதி மற்றும் ஆர்வமூட்டல் ஆகியவற்றுடன் பிணைக்கப்பட்டது. உணர்வு ஐம்புலன்களால் வழங்கப்பெறும் பெருமை, வெட்கம், கோபம், மகிழ்ச்சி போன்ற உணர்வுகளும் மனிதர் உணரும் சிந்தனை அல்லது மன அல்லது உடல் நிலைகளை “உணர்ச்சி” எனலாம். தமிழ் மொழியைப் பொறுத்த அளவில் மிகப் பழங்காலத்திலேயே தொல்காப்பியர் மனித மனதில் தோன்றும் முக்கிய உணர்ச்சிகளை எண் வகையான மெய்ப்பாடுகள் உள்ளத்தில் எழும் உணர்வுகளை கண்டறிந்து வண்ணங்களாக விளக்கியுள்ளார். அவர் கூறும் உணர்ச்சிகள் இடம், காலம் பற்றி எழும் பல்வேறு வகையான இலக்கியங்களுக்குப் பொருந்தி வருவனவாக உள்ளது.

“நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை யென்று
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப” (மெய்ப்பாட்டியல்-3)

தலைவி உடலில் ஏற்படும் மாற்றம்

பசலை பாய்தல் என்னும் உடல் மாற்றத்தை உள-உடல் நரம்பு நோய் (PSYCHO-SOMATIC DISEASE) குறிப்பிடலாம். உள்ளத்தில் ஏற்படுகின்ற கவலையும், பதற்றமும் அளவுக்கு மீறினால் உடலை பாதிக்கும், உடலில் நோயாகவும் தோற்றம் பெற்று மனம் சோர்வடைந்தால் உடலும் சோர்வடையும் என்று மருத்துவ வல்லுநர்களால் சுட்டப்படும் செய்தியாகும். தலைவியினது காம மிகுதியும் தனிமை வருத்தமும் அவளது உள்ளத்தை சோர்வடையச் செய்து அதன் விளைவாக உடலில் பசலை பாய்ந்து உடலில் நிறத்தில் உண்டான மாற்றமாகும்.(சி.நாகமணி)

தலைவன் தலைவியை விட்டு பெரும்பாலும் களவொழுக்கத்தில் பிரிதல் நிலையில் தலைவிக்கு பசலை நோய் ஏற்படுகிறது. அப்பொழுது அவள் உடலில் ஏற்படும் நிற மாற்றமானது பசப்பு நிறமாகும். தலைவனின் பிரிவு ஆற்றாத தலைவி அச்சத்தின் காரணமாக நடத்தையைப் பாதிக்கக்கூடிய உடல் மற்றும் உளவியல் மாற்றங்களை ஏற்படுத்தும் ஒரு உணர்ச்சி நிலையாகும்.(செ.லிட்டில் ப்ளவர்,2002) இதனை குறுந்தொகை பாடலில் அறியலாம்.

“நீர் வார் பைம் புதற் கலித்த
மாரிப் பீரத்து அலர் சில கொண்டே” (குறுந்தொகை. 98:4-5)

இப்பாடல் வரியில் முல்லைத் திணையில் தலைவியின் உணர்ச்சியானது நிற குறியீட்டை பயன்படுத்தி புறநிலை வாயிலாக வெளிப்படுவதாக அமைகிறது. தலைவன் கூறிச் சென்ற பருவத்தில் வாராதமையைக் கண்டு தலைவி பசலையிற்ற நிலையையும் பருவம் வந்தமையும் யாரேனும் தலைவரிடம் கூறினால் நலமாகும் என்று தோழிக்கு கூறுகிறாள். தலைவியின் மனச்சோர்வுக்கு காரணம் உணர்ச்சியாகும். அவ்வாறு வெளிப்படுவதற்கு இங்கு பொன்மை நிறம் பயின்று வந்ததை தலைவன் பிரிவால் தலைவிக்கு ஏற்படும் “பசலை” நோய் தோழி மூலமாக தலைவனுக்கு உணர்த்த செய்வதன் பொருட்டு பீர்க்க மலரைக் காட்ட வேண்டும். பீர்க்க மலரின் நிறமானது பசலை நோயின் மூலம் உணர்வை தலைவி தலைவனுக்கு தெறிவிப்பதாக அறியமுடிகிறது.

மற்றொரு பாடலில்

“நோய் தந்தனனே தோழி
பசலை ஆர்ந்த, நம் குவளை அம் கணெணே” (குறுந்தொகை.13:1-5)

இப்பாடல் வரியில் தலைவியை பிரிந்த சென்ற தலைவன் காம நோயை தந்தனை நினைத்து தலைவியின் கண்கள் குறியீடுகளாக குவளை மலரைப் போன்று புணர்ச்சியில் பசலை நிறம் நிரம்பப் பெற்றவளாக அறிய முடிகிறது. பசலை நோயை வள்ளுவர் பல இடங்களில் கூறியிருப்பதை குறள் வழி அறியலாம்.

“நயந்தவர் நல்காமை சொல்லும் போலும்
பசந்த பனிவாகும் கண்ணே” (குறள்.1232)

தலைவன் தலைவி மீது அன்பில்லாச் செயல்பாட்டை கண் நீர் சொரிக்கின்றமையால் பசலை நிறமானது காணப்படுகிறது. பசலை நிறமானது மேனில் ஏறி ஊர்ந்து பரவி வருகிறது (குறள்.1182) என்றும், காம நோயையும் பசலை நிறத்தையும் கைம்மாறாக தந்ததை (குறள்.1183) அறியமுடிகிறது.

“தோள் புதிய உண்ட பரத்தை இல்சிவப்புற
நாள் அணிந்து, உவக்கும் சுணங்கறை யாதுவே” (பரிப்பாடல்.19-20)

இப்பாடல் வரியில் தலைவன் பிரிவின் கண் பரத்தையரிடம் சென்றதை கண்டு தலைவி வருந்தும் நிலையில் தோழியானவள் செவ்வணி அணிந்துக்கொண்டு பரத்தையர் சேரி வழியே தலைவிக்காகச் சென்றாள் என்ற செய்தியும் தலைவியின் மனநிலையை அறிவதற்கு சிவப்பு நிறம் குறியீடாக காணமுடிகிறது.

இவ்வகை செய்தியை நற்றிணை பாடலில் அறியலாம்,

“எம் நயந்து உறைவி ஆயின், யாம் நயந்து
நல்கினம் விட்டது என்? நலத்தோன் அவ்வயின்
சால்பின் அளித்தல் அறியாது அவட்கு அவள்

பொதி பொதி உடைத்த ஒண் செவ்காந்தள்
வாழை அம் சிலம்பின் வம்பு படக் குவைஇ,
யாழ் ஒர்த்தன்ன இன் குரல் இனவண்டு” (நற்றிணை.,179)

இப்பாடல் வரியில் தலைவி நீராடியச் செய்தியைப் பரத்தையர் உடன் இருக்கும் தலைவனுக்கு உணர்த்தும் விதமாக, தலைவி தனது தோழிக்குச் செந்நிற ஆடை, அணிகலன்கள் மற்றும் மலர்கள் ஆகியவற்றால் ஒப்பனை செய்து அவளை பரத்தையர் வீதியின் வழியே செல்லச் செய்கிறாள். தோழியின் இச்செவ்வணி அடையாளத்தைக் கண்ட தலைவன் காலம் தாழ்த்தாமல் தலைவியுடன் வந்து மகிழ்வான் என்பது புணர்ச்சியின் வெளிப்பாடாக தெளிவுப்படுத்துகிறது. தலைவியின் மாமையாகிய பேரழகு எனக்கும் பயனின்றி என் தலைவனுகும் உதவாமல் பசலை உண்ணும் நிலையை தலைவியின் மனசோர்வு நிகழ்ச்சி அடைந்தமையை அறியலாம்.

“பசலை உணீயர் வேண்டும்
திதலை அல்குல் என் மாமை கவினே” (குறுந்தொகை., 27:4-5)

தலைவியின் உள்ளத்தின் நிகழ்ச்சியின் உடற்குறி வழியே அறியும் விதமாக உடல் அழகு கெட்டு பசலை அடைந்ததை குறிஞ்சி வழி அறியலாம்.

“மெய்யே, வாழி-தோழி-சாரல்
--
கோட்டோடு போகியாங்கு, நாடன்
தான்குறி வாயாத் தப்பற்குத்
தாம் பசந்த, என்தட மென்தோளே” (குறுந்தொகை., 121:1-6)

பசலையால் வருந்தி தலைவி தோழிக்கு கூறுவதையும், அப்பசலைக்கு காரணமான தலைவனையும் பாணனையும் இகழ்ந்து (இழ்வு) இருப்பதை அடுத்தடுத்த முல்லை பாடலில் அறியலாம்.

“சென்ற நாட்ட கொன்றைஅம் பசுவீ
நம்போல் பசக்கும் காலை, தம்போல்
சிறுதலைப் பிணைப்பின் தீர்ந்த நெறி கோட்டு
--

மென்மயில் எருத்தின் தோன்றும்
பின்புல வைப்பிற் காணத் தானே" (குறுந்தொகை., 183:1-3,6-7)

"தன் பார்ப்புத் தின்னும் அன்பு இல் முதலையோடு
வெண் பூம் பொய்கைத்து, அவன் ஊர் என்ப அதனால்
தன் சொல் உணர்ந்தோர் மேனி
பொன்போல் செய்யும் ஊர்கிழவோனே" (குறுந்தொகை., 41:1-4)

தலைவன் தலைவிக்கும் இடையில் நிகழும் உணர்ச்சியின் காரணமாக தலைவனின் பிரிவில் தலைவியின் உடலில் பல மாற்றங்கள் அடைந்திருப்பதை புறநிலையாக நிற குறியீடு மூலம் உணர்ச்சியின் வெளிப்படுவதுடன் தலைவன் தலைவி இருவரும் உடனிருந்து வாழ்வதே முழுமையான வாழ்க்கை என்ற சிந்தனை தலைவியின் மனச்சோர்வினால் பசலை நோய் மூலம் அறியமுடிகிறது .

தலைவி தோழியிடம் தலைவனின் உயர்வினையை கூறுதல்

தலைவியும் தோழியும் தலைவனின் வரைவு நோக்கிக் காத்திருக்கும் களவுச் சூழலிலும், பரத்தையிற் பிரிவில் தலைவன் நீங்கி மீண்டு வரும் கற்புச்சூழலிலும் அவன் மீது அன்புப் பாராட்டும் உள்ளத்தினராய் விளங்கும் தலைவியின் இத்தகைய தன்மையுடன் உள்ளப் பாடல்கள் உளப்பகுப்பாய்வுக்கு உட்படுத்தி தலைவனும் தலைவியும் ஒருவர்க்கு ஒருவர் ஈர்ப்பு உடையவர்களாக பின்வரும் பாலைத்திணையில் மூலம் தலைவியின் உருவத்தை வர்நித்தவர் ஒரு பொழுது கூட இருந்தார், என்ற செய்தி தலைவன் தலைவியிடம் ஏற்படும் பிணைப்பானது அவர்களுக்கு நடக்கும் இனக்கவர்ச்சிக்கான பண்பாக சுட்டிக்காட்டப்படுவதாக பின்வரும் பாடலில் அறியலாம்.

"கண்ணும், தோளும், தண் நறுங்கதுப்பும்,
திதலை அல்குலும் பல பாராட்டி,
நெருநலும் இவணர் மன்னே, இன்றே,

இரந்தோர் மாற்றல் ஆற்றா இல்லின் வாழ்க்கை வல்லாதோரே"
(நற்றிணை., 84:1-3; 11-12)

என்ற நற்றிணை பாடலில் தலைவன் தலைவியின் உறுப்பு நலன்களை சுட்டிக்காட்டும் விதமாக அமைகிறது. என் கண்ணையையும், தோளையும், குளிர்ச்சியுடன் மணம் நிறைந்த கூந்தலையும், தேமல் பொருந்திய அல்குலையும் பலவாறு பாராட்டிய வண்ணம் இருந்தவர் இன்று பிரிந்து செல்வதால் நான் எவ்வாறு தனித்திருப்பேன் என்று தலைவி துன்பத்தை தோழியிடம் கூறுகிறாள்.

குறிஞ்சித்திணையில் தலைவனும் தலைவியும் நீராடிய பொழுது புணர்ச்சி நிகழ்ந்தமை அறியமுடிகிறது. இதனை;

"அம்கண் அறைய அகல் வாய்ப் பைஞ்சுனை
உண்கண் ஒப்பின் நீலம் அடைச்சி
நீர் அலைக் கலைஇய கண்ணிச்
சாரல் நாடனொடு ஆடிய நாளே" (நற்றிணை., 354;7-10)

இப்பாடலில் தலைவியும் தோழியும் சுனை நீரில் நீராடும் பொழுது அங்கு வந்த தலைவன் தலைவியுடன் நீராடியபொழுது அந்த இடத்தில் புணர்ச்சி நிகழ்ந்தமையும், இதில் நேரடியாக இயற்கை சூழ்ந்த பின்புலத்துடன் சுனையில் நீராடியது விளக்கப்பட்டுள்ளது. இதில் தலைவன் பிரிந்த காலத்தில் நடந்த புணர்ச்சியை நினைத்து இன்பம் அடைவதாக பாடல் அமைந்திருப்பதை மனித மனம் காம இச்சை உணர்ச்சி (Psycho Sexuality) ஆக உள்ளது என ஃப்ராய்டிய அடிப்படையில் புரிந்துக்கொள்வதற்கு உதவுகிறது. (தி.கு.இரவிச்சந்திரன்)

தலைவி தலைவன் மீதுள்ள நட்பின் ஆழத்தைக் காட்டுவதாக குறுந்தொகையில் பல பாடலில் வெளிப்படுவதைக் காணலாம்.

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" (குறுந்தொகை., 3:1-4)

இப்பாடலில் நிலத்தை விட பெரியதாகவும் வானத்தைக் காட்டிலும் உயரமுடையதாகவும், கடல் ஆழத்தை விட ஆழம் உடையதாகவும் அதிலும் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் மலர்களில் உயர்ந்த பூவான குறிஞ்சிப் பூக்களின் பெரிய தேனை வண்டுகள் சேகரிக்கின்ற மலை நாட்டின் தலைவன் மீது கொண்ட நட்பின் விளக்கத்தை குறிஞ்சித் திணையில் தலைவிக் கூற்றாக அமைகிறது.

மற்றொரு பாடலில் நெய்தல் திணையில் தலைவன் மேல் தலைவி கொண்டிருக்கும் உயர்ந்த எண்ணமும் நல் அபிமானமும் தெரிய வருவதோடு தலைவன் மேல் வைத்திருக்கும் உயரிய அன்பினைக் காட்டுவதை அறியலாம்.

"இன்மை மாறி மறுமை ஆயினும்,

நீ ஆகியர் எம் கணவனை
யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே" **(குறுந்தொகை., 49:3-5)**

தலைவன் பரத்தையரை விரும்பி பிரிந்து செல்கிறான் அதனைக் கண்டு வருத்தம் கொண்டாலும் மீண்டும் தம்மிடம் திரும்ப வந்துவிடுவான் என்று தலைவி மனமானது இப்பிறப்பு மட்டுமல்லாம் மறுபிறப்பிலும் நீயே என்னுடைய தலைவனாக தவறுகளை நீங்கியவனாக வர வேண்டும் என்று ஏங்குகிறாள் தலைவி, தலைவனின்றி தனக்கு இயக்கம் இல்லை என்ற தலைவியின் நிலை புலப்படுவதுடன் மணம் முடிந்து தலைவன் தலைவி இருவரும் உடனிருந்து வாழ்வதே முழுமையான வாழ்க்கை என்ற சிந்தனையில் தலைவன் பிரிவுக்கு முன் தலைவியுடன் புணர்ச்சியில் ஈடுப்பட்டதையும் மன்றல் (திருமணம்) பின் பரத்தையரை தேடி சென்ற நிலையிலும் தலைவியின் பிரிதல் அன்பின் உணர்வை வெளிப்படுத்துவதை அறியமுடிகிறது.

தலைவியின் ஆற்றாமை நிலை

குழந்தை பருவம் முதல் ஏற்படுகின்ற அனைத்துப் பிரிவுகளும் மனிதனை பக்குவப்படுத்துவதாக உள்ளன. ஒருவன் பண்பாட்டு மனிதனாக உருவாவதற்கும், உறவின் மீது ஆய்ந்த ஈடுப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதற்கும் பிரிவு உறுதுணைப்புரிகிறது.(SUDHIR KAKAR) உளச் சிக்கல்களை ஆய்ந்த உளப்பகுப்பாய்வுத் தத்துவம் "பிரிவு" என்பதன் அடிப்படையில் எழுந்ததுதான் கவலை, பதற்றம், பயம் உண்டாக்கும் என்று இதனை பிரிவுக் கவலை (MOURNING AND MEDANCHOLIA) என்பார் ஃபிராய்ட், இதன் அடிப்படையில் தலைவன் பிரிவில் ஏற்படும் துன்பத்தை ஆற்றாமையாக உளவியல் வெளிப்பாட்டை அதிகளவில் பாலை திணையில் காணப்படுகிறது.

தலைவி தலைவனின் பிரிவினை எண்ணி ஆற்றாமையில் தோழியானவள் தலைவியின் நல் வாழ்விற்கு வழிகாட்டுபவளாகவும் தனக்கென உளவியல் தன்மை எதுவுமில்லாதவளாகவும் தலைவியின் மனத்தாக்கங்களின் வெளிப்பாட்டாய் இருந்து தேற்றுவதை நற்றிணையில் அறியலாம்.

"குறு நிலைக் குரவின் சிறு நனை நறுவீ
வண்டு தரு நாற்றம் வளி கலந்து ஈய
------------- ------------- ---------
ஏதிலாட்டி இவள் எனப்
போயின்று கோல்லோ நோய் தலை மணந்தே" **(நற்றிணை., 56)**

என்ற பாடல் வரியில் பாலை திணையில் தலைவன் வரும் வரை நான் நலம் காத்திருப்பேன் என்றாலும் என் உள்ளம் அவனிடத்தே சென்று விட்டது இனி தலைவனுடன் வந்துச் சேருமா? என தோழியிடம் தலைவி வருந்திக் கூறுகிறாள். விரைவிடை மெலிவு ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைவி கூறுவதாக காணமுடிகிறது.

"வேதின வெரிநின் ஓதிமுது போத்து
ஆறுசெல் மாக்கள் புட்கொளப் பொருந்தும்
சுரனே சென்றனர் காதலர் உரனழிந்து
ஈங்கியான் தாங்கிய எவ்வம்
யாங்கறிந் தன்றிவ் வழுங்க லூரே" **(குறுந்தொகை.,140)**

தலைவன் பொருள்வயிற் தேடி பிரிந்த காலத்தில் அவனுடைய பிரிவினால் ஏற்படும் துன்பத்தை நீங்காத தலைவியை நோக்கி , நீ ஆற்றாமையை நீக்க வேண்டும் என்று தோழி கூறினாலும் தலைவன் சென்ற வழி கொடுமையை நினைத்த தலைவியின் ஆற்றாமையை காணமுடிகிறது.

மற்றொரு குறுந்தொகை பாடலில்

"வெந்திறல் கடுவெளி பொங்கார்ப் போந்தென
நேற்று விளை வழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்
மலையுடை அருஞ்சுரம் என்பநம்
முலையிடை முனிநர் சென்ற ஆறே" **(குறுந்தொகை., 39)**

என்ற பாடல் வரியில் தலைவன் பிரிந்த காலத்தில் ஆற்றாதிருந்த தலைவியை, "நீ ஆற்றல் வேண்டும்" என்று வற்புறுத்திய தோழிக்கு தலைவியானவள் தலைவன் சென்ற வழியானது வெம்மையும், வலிமையும் மிக்க காற்று வீசும் பாலைச் சுரவழி என்று குறிப்பிடுவதிலிருந்து இன்ப வெம்மை நிறைந்து பிரிந்து போனவரைச் சார்ந்தே அதன் இன்பம் பெற வேண்டிய நிலையினை ஆற்றாமையோடு விவரிப்பதாக காணமுடிகிறது. இதில் தலைவியின் உணர்ச்சியானது மனத்தற்காப்பு உத்தியாக அறியும் விதமாக அமுக்கப்பட்ட விழைவுகள், புனைவு மூலம் வெளிப்படும் பொழுது தன முனைப்பு உணர்ச்சியின் ஆதிகத்தால் மகிழ்ச்சி அடைதல் என்னும் நிகழ்வும், துன்பம் அடைதல் என்னும் நிகழ்வாக மாற்றம் பெற்றிருக்கும் என்கிறார் ஃபிராய்டு.

தோழியியானவள் தலைவனை பிரிந்து வருந்தும் தலைவிக்கு ஆற்றாமையை தவிர்க்க வேண்டி வற்புறுத்துவதை காணலாம்,

"எனக்கே வந்தனை போறி! புனற்கால்
அயிர் இடு குப்பையின் நெஞ்சுநெகிழ்ந்து அவிழ,
கொடியோர் சென்ற தேஎத்து மடியாது

இனையை ஆகிச் செல்மதி
வினைவிதுப் புறநர் உள்ளலும் உண்டே” (அகநானூறு., 163:10-14)

இப்பாடல் வரியில் தலைவியின் துன்பம் வெளிப்படும் விதமாக பலவகைப்பட்ட மலர்கள் அழகு அழிகுமாறு, வானத்தில் ஒன்றுக்கூடி இடி முழக்கம் செய்து குளிர்ந்த மேகம் மழையைப் பொழிவித்த பின்னர், கூதிர்காலத்தில் இறுதி நாளில் பிரிவின் துன்பம் நெஞ்சத்தில் மிகுந்திட என்னை விட்டு பிரிந்துச் சென்ற தலைவனை நினைத்து தனித்திருக்குமாறு என் கையில் எஞ்சியிருந்த சில வளையல்களும் கழன்று விழ்ந்தன என்பது துன்பத்தின் ஆற்றாமையின் நிலையினை காணமுடிகிறது.

தலைவி மாலை பொழுதைக் கண்டு தன் ஆற்றாமை வெளிப்படுத்துவதை வள்ளுவர் குறளில் காணலாம்,

“மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்தது இலேன்” (குறள்., 1226)

வேனில் பருவம் வந்துவிட்டது ஆனால் தலைவன் வரவில்லை, இரவுப்பொழுதை நினைத்து மிகவும் வருந்திக் கழித்ததாகவும், தலைவன் தன்னை விட்டு பிரிந்த பொழுது பெரும் வருத்தம் கொண்டவளாக காணப்படுவதை அறியமுடிகிறது.

தலைவன் பிரிந்த காலத்தில் தலைவி தலைவனை நினைத்து அவர் தன்னை விட்டு சிறிதும் பிரியமாட்டார் என்று நினைத்த காலத்தில் தன்னிடம் சொல்லாமல் பிரிந்தமை நினைத்து மனச்சோர்வு, பிரிவுத்துயர் கோபம் கொண்டு வருந்தும் நிலையை குறுந்தொகையில் காணலாம்,

“செல்வார் அல்லரென் றியானிகழ்ந் தன்னே
ஓல்வாள் அல்லளென் றவரிகழ்ந் தனரே
ஆயிடை இருபே ராண்மை செய்த பூசல்
நல்லராக் கதுவி யாங்கென்
அல்லல் நெஞ்சம் அலமலக் குறுமே” (குறுந்தொகை., 43)

இப்பாடல் வரியில் தலைவன் சொல்லாமல் பிரிந்தமையால் தலைவி வருந்தி தன் ஆற்றாமையின் மூலம் துன்பத்தை வெளிப்படுத்துவதை அறியமுடிகிறது.

ஒரு பிரச்சனைக்கு தீர்வு காண முடியாமல் மனக்கவலையால் விரக்தி நிலையில் மன இறுக்கத்தில் தலைவன் பிரிவினால் தன் புணர்ச்சி ஆற்றாமையை பல்வேறு நிலைகளில் கவலை, தவிப்பு, மனத்தற்காப்பு என்பதை உளவியல் கருத்துகளில் உணர்ச்சி பூர்வமாக தலைவன் வரும்வரை அச்சம், பதற்றம் போன்ற பல்வேறு உணர்வுகளால் மன இறுக்கதை தலைவி கூறுவதைக் கேட்ட தோழி தலைவியின் ஆற்றாமையை நீக்க வேண்டி எடுத்துரைப்பதை அறியமுடிகிறது.

தலைவி உறக்கமின்றி தவித்தல் நிலை

ஃப்ராய்டின் உளப்பகுப்பாய்வு முறையில் மனிதனின் நடத்தைகள் லிபிடோ என்னும் பாலுணர்வினால் உந்தப்பட்ட மனிதன் செயல்பாடுகளை மூன்றாக பகுக்கிறார் அதில் ஒன்று பண்பட்ட உள்ளமான (இட்) காமம், வன்மம், பொறாமை, கோபம் போன்ற உணர்வுகள் மற்றும் இயல்பு ஊக்கிகளுக்கான கொள்கலனாகப் பண்பட்ட உள்ளம் அமைகிறது. (தி.கு.இரவிச்சந்தாரன்) தலைவனின் பிரிவின் நிலையில் மனமகிழ்வு இல்லாமல் வாழும் தலைவியில் உள்ளத்தின் மனம் துன்பநிலையில் இருக்கும் பொழுது அதற்காக தொலைவில் இருப்பதை எண்ணி உறக்கமில்லாமல் ஏற்படும் இந்த நிலையை உளவியல் நிலை என்று கூறுவது ஒப்புக்கொள்ளுதல் (Jeyabal.R,2004) இதன் வெளிப்பாட்டை குறுந்தொகைப் பாடல்களில் காணப்படுகின்றன.

“அதுகொல் தோழி! காம நோயே?
விதிகுருகு உறங்கும் இன்நிழற் புன்னை
உரைதிரைத் திவலை அம்பும் தீம்நீர்
மெல்ல புலம்பன் பிரிந்தெனப்
பல்இதழ், உண்கண் பாடொல்லாவே” (குறுந்தொகை., 5:1-5)

இப்பாடல் வரியில் கடற்கரை மணலில் நிழல் தரும் புன்னை மரத்தில் உறங்கும் நாரைகள் கவலையின்றி உறங்குகின்றன. புன்னை மரத்தில் பூத்த மலர்கள் நிறைந்த அத்தகைய நெய்தல் நிலத்தை உடையவன் தன்னை பிரிந்துச் சென்று நன்கு துயில் கொள்வார் நான் மட்டும் உறக்கமின்றி இங்கு தவிக்கிறேன் என்று உளவியலாக தலைவியின் உறக்கமின்மையை வெளிப்படுத்துகிறது.

இதனையே, மற்றொரு பாடலில்

“நள்ளென் றன்றே யாம்மே சொல்லவிந்
தனிடங் கினரே மாக்கள் முனிவின்று
நினந்தலை உலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே” (குறுந்தொகை., 6)

இப்பாடலில் தலைவி விழி உறங்காமல் இருள் செறிந்த நடு இரவாகிய யாமத்தில் விழித்திருக்க அந்நேரத்தில் மனிதர்கள் பேச்சி அடங்கின, உயிர்கள் அனைத்தும் எக்கவலையும் இன்றி உறங்கின நான் மட்டும் துயில் கொள்ளாமல் இருப்பாதக தலைவியின் புணர்ச்சியின் நிலையை தோழிக்கு கூறுவதாக வெளிப்படுகிறது.

அந்நிலையில் அவள் ஒருவரின் துன்பமே பெரியதாக கருதி உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் சில நேரங்களில் துன்பம் இருக்கும் என்பதை மறந்தவளாக இருக்கிறாள். குறுந்தொகைப் பாடலில் இடம் பெற்றது போன்று தலைவி உறங்காமல் தவிக்கும் நிலையானது வள்ளுவர் தன் குறளில் வெளிப்படுத்தியுள்ளார்.

"காமக் கரும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன்" (குறள்., 1167)

தலைவியானவல் காம வெள்ளத்தில் நீர்தியும் அதன் கரையை காணவில்லை என்று நள்ளிரவிலும் தனிமை உடையவளாக இருக்கிறாள் என்பது அறியமுடிகிறது.

தலைவனும் தலைவியும் இரவில் சந்திக்கும் நிலையில் தலைவன் வருகையைக் காண கண் உறங்காமல் காத்திருந்த தலைவியின் தவிப்பை குறுந்தொகை பாடலில் அறியலாம்,

"நள்ளென் யாமத் தையெனக் கரையும்
அஞ்சுவரு பொழுதி னாணு மென்கண்
துஞ்சா வாழி தோழி காவலர்
நெஞ்சுபுண் ணுற்ற விழுமத் தானே" (குறுந்தொகை., 261:4-8)

இப்பாடல் வரியில் தலைவன் இரவுப் பொழுதில் சந்திக்க வரும் நிலையில் அவள் இரவில் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் கணக்கிட்டு வருந்தி நெஞ்சம் புண்பட்டு போனதாகவும், நான் தலைவன் வரவை எதிர்நோக்கி இரவெல்லாம் துயின்றிலேன் என்று தலைவி தோழிக்குச் சொல்லும் பொழுதில் தலைவன் அறியும் செயலாக காணப்படுகிறது.

தலைவன் பொருளை மீட்டு வந்து தலைவி அவனுடன் புணர்ச்சியில் இருந்தமையில் மழக்கம் பெற்று துயில் கொண்டிருக்கும் பொழுது, பொழுது புலர்ந்ததால் துயிலிருந்து எழுப்பிய சேவலை வஞ்சிக்கும் சொற்களை கூறிய தலைவியின் உறக்கமின்றி தவிர்க்கும் நிலையை மருத திணையில் அறியலாம்.

"குவியிணர்த் தோன்றி ஒண்பூ வன்ன
தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்
நள்ளிருள் யாமத் தில்லெலி பார்க்கும்
----------- --------------- ------- -----
------------- ----------------- ---------- -------
ஏம இன்துயில் எடுப்பி யோயே" (குறுந்தொகை., 107)

என்ற பாடல் வரியில் தன் உறக்கத்தை நீக்கிய செங்காந்தள் மலரைப் போன்ற சிவந்த கொண்டையை உடைய சேவலை பழிக்கும் நிலையை அறிய முடிகிறது.

தலைவன் பொருளுக்காக பிரிந்த காலத்தில் அவன் விரைந்து வரவில்லை என்று கவலையடைந்தத் தலைவி தோழியிடம் என்னுடைய துன்பம் அறியாமல் துயில் கொள்ளும் மக்களை நினைத்து பாலைத் திணையில் அறியலாம்.

"மூட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல்
ஓரேன் யானுமோர் பெற்றி மெலிட்டு
ஆஅ ஒல்லெனக் கூவு வென்கொல்
அலமரல் அசைவளி அலைப்பவென்
உயவுநோ யறியாது துஞ்சும் ஊர்க்கே" (குறுந்தொகை., 28)

இப்பாடல் வரியில் பொருள்வயிற் பிரிந்த தலைவனை நினைத்துத் துன்பம்படும் தலைவி சுழன்று வருகின்ற தென்றல் காற்று காமநோய் தந்து என்னை வருத்துகிறது, இதனை உணராமல் கவலையின்றி தூங்கும் ஊர் மக்களை நினைத்து நான் முட்டிக்கொள்வேனா, அவர்களை தாக்குவேனா அல்லது ஏதாவது போலிக் காரணத்தைக் கொண்டு ஊர் நடுவில் ஆ என்று ஓ என்று கூச்சலிட்டு எல்லாரையும் கூப்பீடுவேனா என்று தோழியிடம் தலைவி கூறுவது மூலம் தலைவி உறங்காமல் துன்பத்தில் இருப்பதை அறிந்துக்கொள்ளமுடிகிறது.

மற்றொரு திணைப் பாடலில்

"கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே
எம்மி லயல தேழி லும்பர்
மயிலடி யிலைய மாக்குர னொச்சி
அணிமிகு மென்கொம் பூழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே" (குறுந்தொகை.,138)

இப்பாடலில் மருத திணையில் தலைவன் தோழியிடம் பகல் பொழுதில் தலைவியை சந்திப்பதில் பல சங்கடங்கள் இருக்கின்றது. அதனால் இரவுப்பொழுதில் சந்திக்க முடியுமா என்று வினாவ அதற்கு தோழி, ஊரில் உள்ளவர்கள் உறங்கினாலும் நானும் தலைவியும் உறங்கமாட்டோம் என்று தோழி கூறுவதன் மூலம் தலைவி உறங்காமல் விழித்திருக்கும் மனநிலையைக் காணமுடிகிறது.

ஒருவனது மன விருப்பங்கள் அவனைச் செயல்படுத்தும் இயக்க உணர்வாக இருப்பின் இவ்வியக்க உணர்வு தவறான உணர்வை மனத்தில் பதியச் செய்யும் போது தவறான வழியில் செயல்படத் தொடங்கி தவறான செயலைச் செய்யத் துண்டுவது பண்படா உள்ளம் (தி.கு.இரவிச்சந்திரன்) ஏற்றுக்கொள்ளும் விதமாக தலைவி

தலைவனை நினைத்து பல நிலைகளில் தன் எண்ணத்தை வெளிப்படுத்த முடியாத நிலையில் துயில் கொள்ளமாட்டாள் ஒரு பெண்ணின் துன்பம் மேலும் அதிகரிக்கச் செய்யும் அத்தகைய உணர்ச்சி மூலம் துயரம் ஏற்படுவதையும் உணர்ச்சிக் குறைவதால் குற்றத்திற்கு வழிப்பிறக்க செய்வதையும் உணர்ச்சி நிலைகளில் தலைவி கோவத்தினால் உறக்கமின்றி தவித்தலை குறுந்தொகைப் பாடலில் வெளிப்படுத்துவதை அறியமுடிகிறது.

தலைவியின் வருத்தம் அதிகரிக்கும் சூழல்

தலைவியின் கூற்றுகளில் பெரும்பாலும் தனிமை இரக்கத்தை வெளிப்படுத்துகின்ற மனநிலை உடையவளாகத் திகழ்கிறாள், களவொழுக்கத்தில் தலைவனுடன் இன்புற்ற தலைவி இற்செறிப்பிற்கு ஆளாகி பின் வருத்தம் கொண்டு துன்பம் அடைந்த உளப்போராட்டமானது தலைவனை நினைத்து இயற்கை கொஞ்சும் அயகிய நிலைகளைக் கண்டு அதிக துயரம் கொண்டு வருந்தும் போதும் அதனை தோழி மற்றும் செவிலியர் இடம் தலைவி தன் வருத்தம் அதிகம் தெரிவிக்கும் பாடல்களை சங்க இலக்கியத்தில் காணலாம். (Jeyabal,2004)

"ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து
அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
இறையுறை வோங்கிய நெறியல் மராஅத்த
பிள்ளை யுள்வாய்ச் செரீஇய
இரைகொண்ட மையின் விரையுமாற் செல்வே" (குறுந்தொகை.,92)

கதிரவன் மறைந்த மாலைப்பொழுதில் பறவைகள் தன் கூடுகளுக்கு வந்து தன் குஞ்சிகளைப் பாதுக்காப்பது போல தலைவியானவல் திருமணம் பந்தத்தில் ஈடுப்பட்டு குடும்பத்தோடு வாழும் பொழுது தலைவன் பறவைகள் போல் மாலை நேரத்தில் வந்துவிடவேண்டும் என்று தலைவன் பிரிந்து பொருளீட்டும் காலத்தில் தலைவியின் தனிமை நிலையில் வருத்தம் அதிகம் இருப்பதை காணமுடிகிறது.

தலைவி தலைவனை பிரிந்ததால் அடையும் வருத்தத்தை தோழியிடம் கூறுவதை காணலாம்,

"ஏழூர்ப் பொதுவினைக் கோரூர் யாத்த
உலைவாங்கு மிதிதோல் போலத்
தலைவரம் பறியாது வருந்துமென் னெஞ்சே" (குறுந்தொகை., 172:5-7)

இப்பாடல் வரியில் தலைவன் பிரிவால் வருந்தி, தான் படும் தனிமை துன்பத்தை நீக்கிய தலைவி தலைவன் தன்னை பிரிந்த தனிமையால் துன்புறுவரென்று என்று நினைத்து உள்ளம் வருந்துவது காணமுடிகிறது.

"அவ்வரை யிறக்குவை யாயின்
மைவரை நாட வருந்துவள் பெரிதே" (ஐங்குறுநூறு., 301)

தனிமை இரக்கத்தை வேளிப்படுத்துகின்ற மனநிலை உடையவளாகவும் தலைவியின் வருத்தத்தை தாங்காத தோழி தலைவனிடம் சென்று வெண்மையான மலர் பொருந்திய பாலைக் காட்டு வழியில் மலை நேரத்தில் செல்வதால் தலைவி மிகவும் வருத்துகிறாள் என்பதை தோழி தலைவனிடம் எடுத்துரைப்பதை அறியவதோடு ஒன்றை இழந்து மற்றொன்றைப் பெற நினைப்பது உளப்போராட்டமாகிறது.

முடிவுரை

சங்க இலக்கியங்களில் தலைவியின் உணர்ச்சிகள், குறிப்பாக பிரிவின் வேதனை, பசலை நோய், ஆற்றாமை, உறக்கமின்மை, தனிமை, உளவியல் உளைச்சல் போன்றவை மிக நுட்பமாகவும் உணர்வுப்பூர்வமாகவும் திணை அமைப்பின் வழியாக வெளிப்படுகின்றன. இவ்வுணர்வுகள் தலைவனின் பிரிவை மையமாகக் கொண்டு தோழி வழிக் கூறுகள், புறநிலை குறியீடுகள், இயற்கை அணுகுமுறைகள், நிறம் சார்ந்த சின்னங்கள் போன்றவற்றின் மூலம் வெளிக்காட்டப்படுகின்றன. தலைவி பெரும்பாலும் தன் உணர்வுகளைத் தோழியிடம் வெளிப்படுத்துவதன் மூலம், தனக்குள் உள்ள மன வேதனைகளையும், உடல் மாற்றங்களையும், சமூக சிக்கல்களையும் எளிமையாக எடுத்துரைக்கிறார். ஃப்ராய்ட், சுதீர் காகர் போன்ற உளவியல் வல்லுநர்களின் கோட்பாடுகளின் அடிப்படையில், சங்க இலக்கிய தலைவியின் உள்ளமைப்புகளும், புணர்ச்சி மற்றும் பிரிவின் உளவியல் வெளிப்பாடுகளும், அவரது உணர்ச்சி நிலைகளும் சிக்கலான உளச்சிந்தனைகளாகப் பரிணமிக்கின்றன. எனவே, சங்க இலக்கியங்கள் தமிழ் மக்களின் சமூக-உளவியல் உணர்வுகளை ஆழமாக பிரதிபலிக்கின்ற பெருஞ்செல்வமாக திகழ்கின்றன. சங்க இலக்கியங்களில் தலைவியின் உறக்கமின்றி தவிக்கும் நிலை, அவர் அனுபவிக்கும் உளவியல் வலியை வெளிப்படுத்தும் மிகச் சிறந்த எழுத்துப்பாங்காக அமைந்துள்ளது. ஃப்ராய்ட், தி.கு.இரவிச்சந்திரன், ஜெயபால் போன்ற உளவியல் அறிஞர்களின் கோட்பாடுகளின் அடிப்படையில், தலைவியின் மனநிலை லிபிடோவால் உந்தப்பட்ட ஒருவகை புணர்ச்சி குறைபாட்டினால் ஏற்பட்டது எனக் கொள்ளலாம். தலைவனின் பிரிவால், அவர் வருகையைக் காத்திருக்கும் அவசரமும், அவரிடம் உள்ள நேசமும் தலைவியின் உறக்கத்தையே பறிக்கும் நிலையில் இட்டுவைத்தது. குறுந்தொகை, நற்றிணை போன்ற சங்க நூல்களில் தோழியிடம் கூறும் தலைவியின் வரிகள், அவளது மன அழுத்தம், வேதனை, கோபம், விரக்தி, காமம், ஆற்றாமை

போன்ற உணர்ச்சிகளை தீவிரமாக வெளிக்காட்டுகின்றன. இயற்கை, சமூக சூழ்நிலை, தோழி வழியுரைகள் என அனைத்தும் தலைவியின் மனவேதனையை வெளிப்படுத்தும் கருவிகளாக இலக்கியத்தில் செயல்படுகின்றன. எனவே, தலைவியின் உறக்கமின்மை என்பது, சங்க இலக்கியங்களில் ஒரு பெண்ணின் உளவியல் சிக்கலையும், காதலின் வலிமையையும் பிரதிபலிக்கும் முக்கியமான உணர்ச்சி நிலையாக திகழ்கிறது.

பார்வை நூல்கள்

1. நாகராசன்.வி, குறுந்தொகை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, 2004
2. நாகராசன்.வி, அகநானூறு, நியூசெஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, 2004
3. தமிழிணையம், திருக்குறள் பரிமேலழகர் உரை, நுண்பொருள் மாலை.
4. தமிழிணையம், நற்றிணை, நியூசெஞ்சுரி பிரிண்டர்ஸ் சென்னை-606098
5. தமிழிணையம், ஐங்குறுநூறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப்பட்டது-1957.
6. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல்
7. இந்தியப் பல்கலைகழகத் தமிழாசிரியர் மன்றம், ஆய்வுக்கோவை, 2012.
8. க.பஞ்சாங்கம், புனைவுகயளும் உண்மைகளும் திறனாய்வுக் கட்டுரைகள்.
9. நா.சுப்பிரமணியன், சங்க இலக்கிய வாழ்வியல் மற்றும் சூழலியியல், குறிஞ்சிப் பதிப்பகம், 2004.
10. சிற்றேடு, காலாண்டிதழ் ஜனவரி, மார்ச் 2013.
11. Jeyabal.R, (2004) Agananuru, New Century Book house, Chennai.
12. செ. லிட்டின் ப்ளவர், 2021, காதாநாயகி பெண் மன உளவியல், சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்.
13. தி.கு.இரவிச்சந்திரன், சிக்மண்ட் ப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல், ப.226
14. Sudhir Kakar, The Inner World, P.55
15. S.Freud, Mourning And Melancholia, P.F.L, VOL.11, P.252.
16. S.Freud, Beyond The Pleasure Principle, P.F.L, VOL.11, P.279.
17. சி.நாகமணி, குறுந்தொகை ஓர் உளப்பகுப்பாய்வு அணுகுமுறை, 2004, சுப்பிரமணிய பாரதியார் தமிழியற் புலம் புதுவை பல்கலைக்கழகம், புதுவை-605 014
18. தி.கு.இரவிச்சந்திரன், சிக்மண்ட் ஃப்ராய்டு உளப்பகுப்பாய்வு அறிவியல்,ப.133
19. Scientific Thoughts in Sangam Literature: சங்க இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள். (2024). *Tamilmanam International Research Journal of Tamil Studies*, *1*(03), 103-111. https://doi.org/10.63300/kj1c7a12

References:

1. Nagarajan.V, *Kuruntokai*, New Century Book House, Chennai, 2004.
2. Nagarajan.V, *Akananuru*, New Century Book House, Chennai, 2004.
3. Tamil Internet, *Thirukkural Parimelazhagar Urai, Nunporul Malai*.
4. Tamil Internet, *Narrinai*, New Century Printers, Chennai-606098.
5. Tamil Internet, *Ainkurunuru*, Published by Annamalai University, 1957.
6. Va.Suba.Manickam, *Tamizhkkaathal*.
7. Indian University Tamil Teachers' Forum, *Aayvu Kovai*, 2012.

8. K.Panchangam, *Punaivugalum Unmaigalum Thiranayvu Katturaigal* (Fictions and Realities: Critical Essays).
9. Na.Subramanian, *Sangam Ilakkiya Vaazhviyal Matrum Soozhaliyal* (Sangam Literature: Lifestyle and Environmentalism), Kurinji Publications, 2004.
10. *Sittredu*, Quarterly Journal, January-March 2013.
11. Jeyabal.R, (2004) *Agananuru*, New Century Book House, Chennai.
12. S.Litten Flower, 2021, *Kadhanayagi Pen Mana Ulaiviyal* (Heroine: Female Psychological Aspects), International Tamil Research Journal.
13. Th.Ku.Ravichandran, *Sigmund Freud: Ulappakuppaayvu Ariviyal* (Sigmund Freud: Psychoanalytic Science), p.226.
14. Sudhir Kakar, *The Inner World*, p.55.
15. S.Freud, *Mourning And Melancholia*, P.F.L, Vol.11, p.252.
16. S.Freud, *Beyond The Pleasure Principle*, P.F.L, Vol.11, p.279.
17. C.Nagamani, *Kuruntokai: Or Ulappakuppaayvu Anugumurai* (Kuruntokai: A Psychoanalytic Approach), 2004, Subramaniya Bharathiyar Centre for Tamil Studies, Pondicherry University, Puducherry-605 014.
18. Th.Ku.Ravichandran, *Sigmund Freud: Ulappakuppaayvu Ariviyal* (Sigmund Freud: Psychoanalytic Science), p.133.
19. Scientific Thoughts in Sangam Literature: சங்க இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள். (2024). *Tamilmanam International Research Journal of Tamil Studies*, *1*(03), 103-111. https://doi.org/10.63300/kj1c7a12

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.
Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.